# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2047/6 - 2017 නොවැම්බර් මස 27 වැනි සඳුදා - 2017.11.27

*2047/6 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 27 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## *மாகாண சபை அறிவித்தல்கள்*

**சப்பிரகமுவ மாகாண மாகாண சபை**

*2017 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சப்பிரகமுவ மாகாண சபையின் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை நியதிச்சட்டம்*

*2017.09.26 ஆம் திகதி சப்பிரகமுவ மாகாணத்தின் கௌரவ தவிசாளர் அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டது.*

*207.11.02 ஆம் திகதி சப்பிரகமுவ மாகாணத்தின் கௌரவ ஆளுநர் அவர்களினால் அனுமதி அளிக்கப்பட்டது.*

*சப்பிரகமுவ மாகாண மாகாண சபையின் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

*2017.09.26 ஆந் திகதி சபையில் ஏற்றுக் கொள்ளப்பட்டு 2017.11.02 ஆந் திகதி சப்பிரகமுவ மாகாணத்தின் கௌரவ ஆளுநர் அவர்களினால் அனுமதியளிக்கப்பட்ட சப்பிரகமுவ மாகாண சபையின் 2017 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை நியதிச் சட்டம் அனைவரும் அறிந்து கொள்வதற்காக இங்கு கீழே பிரசுரிக்கப்படுகின்றது.*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சப்பிரகமுவ மாகாண மாகாண சபை**

*2017 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சப்பிரகமுவ மாகாண சபையின் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை நியதிச்சட்டம்*

*பீ.எஸ். ஆர்.எம். விஜயராஜ*
*சபைச் செயலாளர்,*
*சப்பிரகமுவ மாகாண சபை.*

*சப்பிரகமுவ மாகாண சபை,*
*2017, நவெம்பர் 22.*

1A - PG 3783 — 12 (2017/11)

*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## சப்பிரகமுவ மாகாண மாகாண சபை

*1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க சப்பிரகமுவ மாகாண சபையின் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை நியதிச் சட்டம் செல்லுபடியற்றதாகி இல்லாதொழியும் என்பது பற்றி.*

*2017 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சப்பிரகமுவ மாகாண சபையின் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை நியதிச்சட்டம்*

*இந்நியதிச் சட்டம் விதிப்பதன் மூலம் இதற்கு முன் இந்த மாகாண சபையினால் விதிக்கப்பட்டிருந்த 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, சப்பிரகமுவ மாகாண சபையின் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை நியதிச்சட்டம் செல்லுபடியற்றதாகி இல்லாதொழியும்.*

## சப்பிரகமுவ மாகாண மாகாண சபை

*2017 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சப்பிரகமுவ மாகாண சபையின் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை நியதிச்சட்டம்*

*சப்பிரகமுவ மாகாணத்திற்குள் தொழில்நுட்ப, வணிக, வியாபார மற்றும் வருமானம் உண்டாக்கும் கருத்திட்டங்களை ஸ்தாபித்தல், அபிவிருத்தி செய்தல் மற்றும் மேம்படுத்தல் ஆகிய பணிகளுக்காக கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையொன்று ஸ்தாபித்தல் மற்றும் அதனுடன் தொடர்புடைய அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடுகளைச் செய்வதற்காக ஒழுங்கு செய்யப்பட்ட நியதிச்சட்டம்.*

, yqi; fr;rd ehaf Nrhrypr;Fb aurpd; rggpufKt khfhz ri gapd; hy; gpd;t UkhWt pjpf;ggLfpd;wJ.

*சுருக்கப்பெயரும் செயற்படும் திகதியும்.*

01. , e;epaj pr;rl;l k;rggpufKt khfhz ri gapd; 2017 Mk; Mz ;bd; 14 Mk;, yf;f i fj;nj hopy; mgpt pUj;j pmj pfhu ri g epaj pr;rl;l k;vd mwpKfggLj;j ggLt Jld; rggpufKt khfhz j;j pd; MS eu;mt uf;s pd; mq;fPhuk;fp l j;j; j pfj pnj hl f;f k;nrawgLk;

*கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையை ஸ்தாபித்தல்.*

02. (i) *சப்பிரகமுவ மாகாணத்திற்குள் "கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை" என்ற பெயரால் அறிமுகப்படுத்தப்படுகின்ற அதிகார சபையொன்று இத்துடன் ஸ்தாபிக்கப்படுகின்றது (இதனகத்து இதன்பின் "அதிகாரச் சபை" என அறிமுகப்படுத்தப்படுகின்ற).*

(ii) *இந்த அதிகார சபை முதலாம் (01) உட்பந்தியில் அறிமுகப்படுத்தப்படுகின்ற தொடர்ச்சியானவொரு நிலைப்பாடும் பொது முத்திரை ஒன்றும் உடைய கூட்டுத்தாபனமொன்றாதல் வேண்டும். அத்துடன் அந்த கூட்டுத்தாபனத்தின் பெயரைக் கொண்டு வழக்குத் தொடரக்கூடியதாக இருப்பதுடன் தொடரப்படவும் செய்யப்படலாம்.*

*பணிப்பாளர் சபையின் அமைப்பு.*

*03.* (i) *இந்த அதிகார சபை சப்பிரகமுவ மாகாண சபையின் கைத்தொழில் அமைச்சரால் நியமனம் செய்யப்படுகின்ற எட்டு (08) அங்கத்தவர்களைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அவர்கள் நியமனம் செய்யப்படல் வேண்டும்.*

(அ) *அமைச்சரால் அதிகார சபையின் பணிகள் மற்றும் குறிக்கோள்கள் தொடர்பில் விசேட அனுபவமும் தகைமைகளும் உள்ளவர்களெனக் கருதப்படும் இரு நபர்கள்.*

(ஆ) *சப்பிரகமுவ மாகாண சபையின் நிதி விடயம் பொறுப்பான அமைச்சரால் பெயர் குறிப்பிடப்படும் அங்கத்தவர் ஒருவர்.*

(இ) *சப்பிரகமுவ மாகாணத்தின் கைத்தொழில் அபிவிருத்தி மாகாணப் பணிப்பாளர்.*

(ஈ) *கைத்தொழில் அமைச்சின் கணக்காளர்.*

(உ) *தேசிய அருங்கலைகள் பேரவையின் இரத்தினபுரி அல்லது கேகாலையின் உதவிப்பணிப்பாளர் அல்லது அபிவிருத்தி உதவியாளர்.*

(ஊ) *சப்பிரகமுவ மாகாணத்தின் பொறியியற் சேவைப்பிரிவின் பொறியியலாளர் ஒருவர்.*

(எ) சப்பிரகமுவ மாகாணத்தின் கைத்தொழில் அமைச்சின் செயலாளர் அல்லது அவரின் பிரதிநிதியொருவர்.

(ii) சப்பிரகமுவ மாகாணத்தின் கைத்தொழில் அமைச்சரால், அங்கத்தவர்களுள் ஓர் அங்கத்தவர் அதிகாரச் சபையின் தவிசாளராக நியமனம் செய்யப்படல் வேண்டும். அதிகார சபையின் தவிசாளர்.

(iii) கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரச் சபையின் பொது முகாமையாளர் அமைச்சரின் அனுமதியுடன் உத்தியோகபூர்வ அதிகாரத்துடன் நியமனம் பெறுவார்.

(iv) அதிகார சபையின் பொது முகாமையாளருக்கு, பணிப்பாளர் சபையின் பணிப்பாளர் ஒருவருக்கு உரித்தாகும் அனைத்துக் கொடுப்பனவுகளும் சலுகைகளும் உரித்தாகும்.

04. எவரேனுமொரு நபர் -

அங்கத்துவத் திற்கு தகைமை அற்றமை.

(அ) பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராக அல்லது மாகாண சபை உறுப்பினர் ஒருவராக நியமனம் செய்யப்படுவதன் காரணமாக,

(ஆ) அதிகார சபையில் அங்கத்தவர் ஒருவராகப் பணியாற்றுகையில் பங்கமேற்படக்கூடிய வகையில் நிதி சார்பான அல்லது ஏனையவொரு கடப்பாட்டிற்கு உட்பட்டிருப்பின் அந்நபர் அதிகார சபையின் அங்கத்தவர் ஒருவராக நியமனம் செய்யப்படுவதற்கு அல்லது தொடர்ந்தும் பணியாற்றுவதற்கு தகைமையற்றவராக இருத்தல் வேண்டும்.

05. (i) நியமனம் செய்யப்பட்ட எந்தவொரு அங்கத்தவரும் இறப்பு, இராஜினாமா அல்லது அவரது பதவி நீக்கம் அல்லது சப்பிரகமுவ மாகாண சபையிலிருந்து வெளியே இடமாற்றம் பெறுதல் காரணமாக பதவிவெற்றிடம் ஏற்பட்டால் மாத்திரமே தவிர மூன்று (03) வருட காலத்துக்கு சேவை புரிதல் வேண்டும். அத்துடன் அவர் மீளவும் நியமனம் செய்யப்படுவதற்கு தகைமையுடையவராக இருப்பார். அதிகார சபையின் அங்கத்தவர் களின் சேவைக் காலம்.

(ii) எவரேனுமொரு அங்கத்தவரின் இறப்பு, இராஜினாமா அல்லது அவரது பதவி நீக்கம் ஆகிய சந்தர்ப்பங்களில் அமைச்சரால் மூன்றாம் (03) பந்திக்கு ஏற்புடையதாக நீங்கிச் சென்ற நபர் நியமனம் செய்யப்பட்டவாறு ஏனையவொரு நபர் நியமனம் செய்யப்படுவதற்கு அதிகாரம் கிடைக்கும். மேற்கூறிய அங்கத்தவருக்குப் பதிலாக நியமனம் செய்யப்பட்ட எவரேனுமொரு நபர் அந்த அங்கத்தவரின் பதவிக் காலத்தின் எஞ்சியுள்ள காலத்திற்குள் பதவியை வகிப்பதற்கு அவரது பதிலாள் என்ற வகையில் சந்தர்ப்பம் கிடைக்கும். அவ்வாறாயினும் புதிய கைத்தொழில் அமைச்சர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டவொரு சந்தர்ப்பத்தில், தவிசாளர் உட்பட பணிப்பாளர் சபையைக் களைத்துவிட்டு புதிய தவிசாளர் ஒருவரும் பணிப்பாளர் சபையொன்றும் நியமனம் செய்யப்படுதல் வேண்டும்.

(iii) நோய் ஏற்படுதல் காரணமாக அல்லது இலங்கையிலிருந்து வெளியேறியிருத்தல் காரணமாக அல்லது ஏனையவொரு காரணத்தினால் அல்லது அதிகாரச் சபையின் எவரேனுமொரு அங்கத்தவருக்கு தற்காலிகமாக அவரது பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு இயலாதிருக்கும் சந்தர்ப்பமொன்றில் அமைச்சரால் அப்பதவியின் பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்காக வேண்டிய கால எல்லைக்கு அந்நபருக்குப் பதிலாக ஏனையவொருவர் நியமனம் செய்யப்படலாம். அத்துடன் அப்பணிகள் மூன்றாம் பந்தியின் ஏற்பாடுகளுக்கிணங்க மேற்படி தற்காலிகமாக பதவி நீங்கியிருக்கும் அங்கத்தவர் முதலில் நியமனம் செய்யப்பட்டவாறு நியமனம் செய்யப்படுதல் வேண்டும்.

06. (i) அதிகார சபையின் முத்திரை அதிகார சபையின் பொது முகாமையாளரின் பொறுப்பில் இருத்தல் வேண்டும்.

(ii) அதிகார சபையின் முத்திரையில் அதிகார சபையினால் தீர்மானிக்கப்படக்கூடிய வகையில் மாற்றங்கள் செய்யப்படலாம். அதிகார சபையின் முத்திரை.

07. (i) மூன்றாம் பந்தியின்படி நியமனம் செய்யப்பட்ட எந்தவொரு அங்கத்தவரையும் எவ்வித காரணமும் காட்டாமல் பதவி நீக்கம் செய்வது சந்தர்ப்பத்திற்கேற்பது என அமைச்சர் கருதும் சந்தர்ப்பமொன்றில் அவ்வாறு அமைச்சரால் பதவி நீக்கம் செய்யப்படலாம். அதிகார சபையின் அங்கத்தவர்களை நீக்கம் செய்தல்.

(ii) முதலாம் (01) உட்பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அங்கத்தவர் ஒருவர் பதவிநீக்கம் செய்யப்பட்டவொரு சந்தர்ப்பத்தில் அந்தத் தீர்ப்புத் தொடர்பில் எந்தவொரு நீதிமன்றத்திலும் விசாரணை செய்யப்படாதிருத்தல் வேண்டும்.

அதிகாரச் சபையின் அங்கத்தவர்களின் இராஜினாமாக்கள்.

08. தாம் பதவி இராஜினாமா செய்வதாக அமைச்சரிடம் கடிதமொன்று அனுப்புவதன் மூலம் அதிகாரச் சபையின் தவிசாளர் உட்பட எந்தவொரு அங்கத்தவருக்கும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தமது பதவியிலிருந்து விலகலாம்.

அதிகார சபையின் தவிசாளரினதும் அங்கத்தவர் களினதும் சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகள்.

09. அமைச்சரால் தீர்மானிக்கப்படக்கூடிய வகையிலான சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகள் அதிகார சபையின் நிதியத்திலிருந்து தவிசாளர், பொது முகாமையாளர் மற்றும் அங்கத்தவர்களுக்குச் செலுத்தப்படலாம்.

10. (i) அதிகார சபையின் தவிசாளர் சமுகமளித்திருக்கும் எந்தவொரு கூட்டத்திற்கும் அவர் தலைமை வகித்தல் வேண்டும். ஏதாவதொரு கூட்டத்திற்கு தவிசாளர் சமுகமளிக்காதிருக்கும் சந்தர்ப்பமொன்றில் அதிகார சபையின் கூட்டத்திற்கு சமுகமளித்திருக்கும் அங்கத்தவர்களால் தெரிவு செய்யப்படும் எந்தவொரு அங்கத்தவருக்கும் கூட்டத்திற்கு தலைமை வகிக்கலாம்.

அதிகார சபையின் கூட்டங்களுக்கான நிறைவெண்.

(ii) அதிகார சபையின் எந்தவொரு கூட்டத்தினதும் நிறைவெண் நான்கு (04) ஆக இருத்தல் வேண்டும்.

(iii) அதிகார சபையின் எந்தவொரு கூட்டத்தினதும் பிரச்சினைகளுக்கான தீர்ப்புக்கள் சமுகமளித்திருக்கும் அங்கத்தவர்களுள் அதிகப்படியானோர்களின் விருப்பத்தின்படி மேற்கொள்ளப்படல் வேண்டும். அவ்வாறாயினும் அங்கத்தவர்கள் பிரிந்திருப்பின் தவிசாளருக்கு தீர்ப்பளிப்பு வாக்கொன்று கிடைத்தல் வேண்டும்.

அதிகார சபையின் ஏதாவதொரு செயல் நியமனத்தில் பதவி வெற்றிடங்கள் நிலவுதல் காரணமாக அல்லது நியமனத்தின் குறைப் பாடுகள் காரணமாக இரத்துச் செய்யாதிருத்தல்.

11. அதிகார சபையின் ஏதாவதொரு செயல், தீர்ப்பு அல்லது சட்ட நடவடிக்கையானது, அனேகமாக அந்த அதிகார சபையின் அங்கத்தவர்களின் பதவி வெற்றிடங்கள் நிலவுதல் அல்லது அந்த அதிகார சபையின் அங்கத்தவர்களுள் எவரினதும் நியமனங்களில் குறைப்பாடுகள் இருப்பதன் காரணமாக செல்லுபடியற்றதாகாமல் இருத்தல் வேண்டும்.

அதிகாரச் சபையின் பொது முகாமையாளர்.

12. அதிகார சபையினால் அமைச்சர் அவர்களின் அனுமதியுடன் திறமையும் அனுபவமும் உடைய ஒருவர் அதிகார சபையின் பொது முகாமையாளராக நியமனம் செய்யப்படல் வேண்டும்.

13. அதிகாரச் சபையினால் -

அதிகாரச் சபையின் பணியாட் தொகுதி தொடர்பான அதிகாரம்.

(அ) அதிகார சபையின் பணியாட் தொகுதி தொடர்பான நியமனங்கள், பதவி நீக்கங்கள் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் என்பன நிர்வகிக்கப்படலாம்.

(ஆ) பணியாட் தொகுதியின் சம்பளங்கள், கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய செலுத்தல்கள் அதிகார சபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படலாம்.

(இ) அரசாங்க சேவையின் அல்லது மாகாண அரசாங்க சேவையின் இரண்டாந்தர அடிப்படையில் வரும் ஊழியர்களைத் தவிர அதிகாரச் சபையின் கீழ் பணிபுரியும் ஏனைய பணியாட் தொகுதிக்கு தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகள் ஏற்புடையததாக இருக்கமாட்டாது.

(ஈ) பணியாட்தொகுதியின் நலன்களுக்காக சேமலாப நிதியம் மற்றும் ஏனைய வேலைத் திட்டங்களை ஸ்தாபித்து நடாத்திச் செல்லலாம். அத்துடன் அவற்றிற்கான அங்கத்துவப் பணத்தொகைகளும் செலுத்தப்படலாம்.

(உ) பணியாட்தொகுதியின் சேவைகள் தொடர்பான விதிகளும் நிபந்தனைகளும் நிச்சயிக்கப்படலாம்.

(ஊ) ஊழியர்களினதும் உத்தியோகத்தர்களினதும் நலன்புரி விவகாரங்கள், காப்புறுதி விவகாரங்கள் மற்றும் அவசரகால இடர்கள் என்பன தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம்.

(எ) அதிகார சபையின் நிறுவனங்களுக்கு உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களை நியமனம் செய்யும் போது அதற்கான அமைச்சரின் அனுமதியுடன் தவிசாளர் உட்பட பணிப்பாளர் சபைக்கு அதிகாரம் இருக்கும். அத்தகைய நியமனக் கடிதங்களில் ஒப்பமிடும் அதிகாரம் அமைச்சின் செயலாளருக்கும் பொது முகாமையாளருக்கும் இருக்கும். தேவையான சந்தர்ப்பங்களில் அரசாங்க மற்றும் மாகாண அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களுக்கான பதவிகளுக்கு நியமனம் செய்யும் அதிகாரம் அமைச்சின் செயலாளருக்கே இருக்கும்.

(ஏ) அதிகார சபையின் பணியாட் தொகுதியை தெரிவு செய்வதற்கு தவிசாளர் உட்பட பணிப்பாளர் சபைக்கு அதிகாரம் இருக்கும். அவர்கள் தொடர்பான ஒழுக்காற்று அதிகாரங்களைச் செயற்படுத்துவதற்கான அதிகாரம் பணிப்பாளர் சபையின் சிபார்சுகளுடன் அமைச்சின் செயலாளரிடம் ஒப்படைக்கப்படும்.

14. அதிகார சபையின் அதிகாரங்கள் மற்றும் பணிகள் :- அதிகாரச் சபையின் அதிகாரங்கள் மற்றும் பணிகள்.

(அ) மாகாண சபையினால் நிச்சயிக்கப்படும் வகையில் கைத்தொழில் அபிவிருத்திக்கு ஏற்புடைய கொள்கைகளை ஒழுங்கு செய்தல் மற்றும் செயற்படுத்தல்.

(ஆ) சப்பிரகமுவ மாகாணத்தின் கைத்தொழில், வர்த்தக மற்றும் தொழில் முயற்சி விவகாரங்கள் மற்றும் கருத்திட்டங்களை ஆரம்பித்தல், ஊக்குவித்தல், கட்டியெழுப்புதல் மற்றும் அபிவிருத்தி செய்தலுக்கு உதவியளித்தல்.

(இ) மூலப்பொருட்கள் மற்றும் உள்ளூர் தொழில்நுட்பத்தை வழங்குதல் மற்றும் பகிர்ந்தளித்தல்.

(ஈ) கைத்தொழில் அபிவிருத்திக்கு ஏற்புடைய தகவல்கள் மற்றும் அறிவைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் வழங்குதல்.

(உ) அதிகார சபையின் ஊழியர்களின் நலன்புரி விவகாரங்களுக்கான கருத்திட்டங்களை ஆரம்பித்தல்.

(ஊ) தொழிலின்றி பீடிக்கப்பட்டவர்களுக்காக பல்வேறு நிறுவனங்களிலிருந்து கிடைக்கும் நிதிகளின் கீழ் பயிற்சித்திட்டங்களை நடத்துதல், கைத்தொழில்களுக்குத் தேவையான முகாமைத்துவ மற்றும் தொழில் திறமைகள், விறபனை மற்றும் பயிற்சி வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல்.

(எ) கைத்தொழில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி விவகாரங்கள்.

(ஏ) அதிகார சபையின் பணிகளுக்குத் தேவையான உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களை நியமனம் செய்தல் மற்றும் அவர்களுக்குத் தேவையான அதிகாரங்களைக் கையளித்தல்.

(ஐ) அதிகார சபையின் பணிகளை நிருவகிப்பதற்காக சட்ட விதிகளை ஒழுங்கு செய்தல்.

(ஒ) அதிகார சபையின் சேவை வசதிகளுக்காக கட்டணங்களை அறவிடுதல்.

(ஓ) அதன் அதிகாரங்கள், சேவைகள் மற்றும் பணிகளைச் செயற்படுத்துகையில் ஏற்புடையதாகின்ற அல்லது இடைநேர் விளைவான அனைத்துச் செயல்கள் மற்றும் கருமங்கள்.

(ஔ) கைத்தொழிலாளர்களுக்கான மூலதனம் மற்றும் கடன் வசதிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கான உதவிகளைச் செய்தல்.

15. அதிகார சபைக்கு அதிகாரச்சபைக்கேயானவொரு நிதியம் இருத்தல் வேண்டும். கீழ்க்குறிப்பிடப்பட்ட பணங்கள் அதிகார சபையின் நிதியத்திற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும். உதவிகள் மற்றும் அன்பளிப்புகள்.

(அ) அதிகாரச் சபையின் உபயோகத்திற்காக சப்பிரகமுவ மாகாண சபையினால் காலத்துக்குக் காலம் ஒதுக்கப்படும் பணத்தொகைகள்.

(ஆ) இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே அல்லது ஏனைய மூலகங்களிலிருந்து அல்லது அன்பளிப்புகளாக அதிகார சபைக்குக் கிடைக்கும் அனைத்துப் பணத்தொகைகள். அதிகார சபையின் நிதியம்.

(இ) ஏதாவதொரு நியதிச் சட்டத்தின் மூலம் அதிகார சபைக்கு மாற்றப்படும் பணத்தொகைகள்.

(ஈ) அதிகார சபையினால் ஆட்கள், சங்கங்கள், குழுக்கள் மற்றும் பிரத்தியேக அல்லது பொதுப் பிரிவுகளுக்குட்பட்ட இயக்கங்களுக்காக சேவைகளை வழங்குதல் தொடர்பில் பெற்றுக் கொள்ளப்பட்ட கட்டணங்கள் மற்றும் அதிகார சபையினால் வழங்கப்பட்ட மூலதனம் மற்றும் கடன்கள் மூலம் வழங்கப்படும்வட்டிப் பணத்தொகைகள்.

நிதியத்தின் நிருவாகம்.

16. நிதியத்தின் நிருவாகம், முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாடு அதிகார சபையிடம் ஒப்படைக்கப்படும்.

நிதியத்தின் நிதியாண்டு மற்றும் கணக்குப் பரிசோதனைகள்.

17. (i) அதிகார சபையின் நிதி விவகாரங்களுக்கான நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாகும்.

(ii) அதிகார சபையினால் அனைத்து வருமானங்கள் மற்றும் செலவினங்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் அதிகார சபையின் ஏனைய கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பிலான குறிப்பிட்ட கணக்குப் புத்தகங்களை பேணிச் செல்லப்படுதல் வேண்டும்.

(iii) அரசியல் அமைப்பின் 154 ஆம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பொது யாப்புக்களின் கணக்குச் சோதனைகளுக்காக ஏற்புடையதாகும் ஏற்பாடுகள் அதிகாரச் சபையின் கணக்குச் சோதனைகளுக்காகவும் ஏற்புடையதாக இருக்கும்.

(iv) அதிகார சபையின் கணக்குச் சோதனைகள் தொடர்பான அறிக்கை அதிகார சபையினால் அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்பு அக்கணக்கு அறிக்கை ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைவதற்கு முன்பு மாகாண சபைக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

அதிகார சபையின் உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் அரசாங்க உத்தியோகத்தர்களாவார்கள்.

18. அதிகார சபையின் அனைத்து உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களும் தண்ட விதிக்கோவையின் அர்த்தத்திற்கிணங்கவும் அதன் சேவைகளுக்காகவும் அரசாங்க உத்தியோகத்தர்களெனக் கருதப்படல் வேண்டும்.

அதிகார சபை இலஞ்சச்சட்டத்தின் அர்த்தத்திற்கிணங்க அட்டவணைப்படுத்தப்பட்டவொரு நிறுவனமாகக் கருதப்படும்.

19. அதிகார சபை இலஞ்சச் சட்டத்தின் அர்த்தத்திற்கிணங்க அட்டவணைப்படுத்தப்பட்டவொரு நிறுவனமாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க விளங்கிக் கொள்ளல் வேண்டும்.

அதிகார சபையின் நிதி நிருவாகம்.

20. (i) அதிகார சபை சப்பிரகமுவ மாகாணத்தின் நிதிச் சட்டங்கள் மற்றும் அரச நிதி ஒழுங்கு விதிகளின்படி பணிகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(ii) அதிகார சபைக்குச் சொந்தமான ஏதாவதொரு நிறுவனம் அல்லது சேவை ஏதாவதொரு காரணத்தினால் மூடப்படுதல், சட்டரீதியான முறையில் மூடிவிடுதல் போன்ற சம்பவங்களின்போது அவற்றிற்கு ஏற்புடைய அசைவுள்ள மற்றும் அசைவற்ற ஆதனங்கள் அதிகார சபையிடம் பொறுப்பளிக்கப்படும். அவ்வாறு மேற்கூறிய நிறுவனத்தின் அல்லது சேவையின் பொறுப்புக்கள் அதிகார சபையிடம் ஒப்படைக்கப்படுவதுடன் அதிகார சபையினால் முறைப்படி அந்தப் பணிகள் நிறைவேற்றப்படுதல் வேண்டும். அதற்காக தேவையான சந்தர்ப்பங்களில் அவ்வாறு ஒப்படைக்கப்பட்ட அசைவுள்ள மற்றும் அசைவற்ற ஆதனங்களை விற்பனை செய்து பொறுப்புக்களை நிறைவேற்றுதல் வேண்டும்.

(iii) அதிகார சபைக்குச் சொந்தமான ஒவ்வொரு நிறுவனம் மற்றும் சேவை தொடர்பிலும் வருடாந்த அளவைச் சபைக் கணிப்பீடொன்று நடத்தப்படுதல் வேண்டும்.அத்துடன் மேற்கூறிய அதிகாரங்கள் அமைச்சின் செயலாளருக்கு இருக்கும். அமைச்சின் செயலாளரால் அதிகாரச் சபையின் தவிசாளரிடம் சமர்ப்பிக்கப்படும் அறிக்கையின் பிரதியொன்று கணக்காய்வாளர் அதிபதியிடம் சமர்பிக்கப்படுதல் வேண்டும்.

(iv) உள்ளக கணக்காய்வுப் பிரிவு மற்றும் கணக்காய்வாளர் அதிபதி அவர்களால் அனுப்பப்படும் கணக்காய்வு அறிக்கைகள் பணிப்பாளர் சபையின் கலந்துரையாடலுக்குப் பாத்திரமாதல் வேண்டும். அதில் காட்டிக் கொடுக்கப்படும் குறைப்பாடுகளைத் திருத்திக் கொள்வதும் கணக்காய்வுக் கேள்விகளுக்கு பதில்களை வழங்குவதும் பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும்.

21. தவிசாளர் பணிப்பாளர் சபையின் எழுத்து மூலமான அனுமதியுடன், அதிகார சபையின் எந்தவொரு ஊழியரிடமும் எழுத்துமூலமான அதிகாரங்கள், சேவைகள் மற்றும் பணிகள் ஒப்படைக்கப்படலாம்.

22. ஊழியர்களின் சம்பளங்கள், கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய பணச் செலுத்தல்கள் என்பனவற்றிற்காக ஏற்படும் செலவினங்களுக்காக அதிகாரச் சபையின் பொறுப்பின் கீழ் இருக்கும் அசைவற்ற மற்றும் அசைவுள்ள ஆதனங்களைப் பேணுவதற்காகவும், இந்நியதிச் சட்டத்தின் கீழான சேவைப் பணிகள் மற்றும் கடப்பாடுகளுக்காகவும் சப்பிரகமுவ மாகாண சபையினால் வருடாந்தக் கொடுப்பனவொன்று அதிகார சபையிடம் விடுவிக்கப்படலாம். அதிகாரச் சபையிடம் கிடைக்கும் வருடாந்தக் கொடுப்பனவுகள்.

23. இந்நியதிச் சட்டத்தின் கீழ் அதிகார சபையின் கடப்பாடுகளுக்காக அல்லது அதிகார சபையின் சேவைப் பணிகளை நிறைவேற்றுவதற்காக அதிகார சபைக்குத் தேவையான பணத்தொகைகள் வங்கி மேலதிகப் பற்றொன்றின் மூலம் அல்லது ஏனையவொரு முறையில் அதிகார சபையினால் அமைச்சரின் இணக்கத்துடன் அல்லது அவர்களால் கொடுக்கப்பட்ட ஏதாவதொரு பொது அனுமதியின் விதிகளுக்கிணங்க கடனாகப் பெற்றுக் கொடுக்கப்படலாம். கடனெடுத்தல் தொடர்பான அதிகாரங்கள்.

24. (i) அதிகார சபையின் விவகாரங்கள் தொடர்பாக அமைச்சரால் அதிகார சபையிடம் கட்டளைகள் இடப்படலாம் அத்துடன் அதிகார சபையினால் அக்கட்டளைகள் நிறைவேற்றப்படுதல் வேண்டும். அமைச்சரின் கட்டளைகள்.

(ii) அதிகார சபையின் அறிக்கைகள் மற்றும் தகவல்கள் தன்னிடம் வழங்குமாறு அமைச்சரால் அதிகார சபையிடம் கட்டளைகள் இடப்படலாம். அத்துடன் அதிகார சபையினால் மேற்கூறிய அறிக்கைகளும் தகவல்களும் எவ்வித தாமதமுமின்றி அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

25. (i) அதிகார சபைக்கு ஏற்புடைய கருமங்கள் தொடர்பாக விதிகள் ஒழுங்கு செய்யப்படலாம். கட்டளைகள்.

(ii) அமைச்சரால் ஒழுங்கு செய்யப்படும் ஒவ்வொரு கட்டளையும் அமைச்சரவையின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(iii) அமைச்சரவையின் அனுமதியைப் பெற்றுக் கொண்ட பின்பு சப்பிரகமுவ மாகாண சபையின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். மாகாண சபையின் அனுமதி கிடைத்த பின்பு வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுதல் வேண்டும்.

26. இந்நியதிச்சட்டம் செயற்படத் தொடங்கியவுடன் 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க சப்பிரகமுவ மாகாண சபையின் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை நியதிச் சட்டம் இம்மாகாணத்திற்குள் செயற்பட மாட்டாது. அதற்குப் பதிலாக 2017 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இந்நியதிச் சட்டத்திற்காக சப்பிரகமுவ மாகாண ஆளுநர் அவர்களின் அங்கீகாரம் கிடைத்த திகதி தொடக்கம் இந்நியதிச் சட்டம் செயற்படும்.

27. (i) இந்நியதிச் சட்டத்திற்கும் நடைமுறையிலுள்ள ஏனைய ஏதாவதொரு சட்டத்திற்கும் இடையில் முரண்பாடுகள் அல்லது ஒவ்வாமை ஏற்படும் சந்தர்ப்பமொன்றில் இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகள் நடைமுறையிலுள்ள சட்டத்தைத் தாழ்த்திச் செயற்படும்.

(ii) இந்நியதிச் சட்டத்தின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய உரைகளுக்கிடையே ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கிச் செயற்படல் வேண்டும்.

28. சொற்கள் தொடர்பில் வேறு பொருள் தேவைப்பட்டாலன்றி இந்நியதிச் சட்டத்தில் – பொருள் கூறல்.

"அமைச்சர்" என அறிமுகப்படுத்துவது சப்பிரகமுவ மாகாண சபையின் கைத்தொழில் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரவையாகும்.

"மாகாண சபை" என அறிமுகப்படுத்துவது சப்பிரகமுவ மாகாண சபையாகும்.

"அமைச்சரவை" என அறிமுகப்படுத்துவது சப்பிரகமுவ மாகாண சபையின் அமைச்சரவையாகும்.

"செயலாளர்" என அறிமுகப்படுத்துவது சப்பிரகமுவ மாகாண சபையின் கைத்தொழில் அமைச்சின் செயலாளராகும்.



இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.